சின்னச் சின்னதாய்...

தொழிலதிபரிடம் ரூ.2.20 கோடி மோசடி கோவையில் தம்பதி மீது வழக்கு பதிவு

● கோவை

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகேயுள்ள சமத்தூர் அண்ணா நகரைச் சேர்ந்தவர் டி.ஜெபராஜ் (58). இவர், நிலக்கடலை வியாபாரம் செய்து வருகிறார். இவர், கோவை மாவட்ட குற்றப்பிரிவு போலீஸாரிடம் அளித்த புகார் மனுவில், 'பொள்ளாச்சி ஜோதி நகரைச் சேர்ந்தவர் தேவசீலன். இவரது மனைவி ராஜி. ரங்கசமுத்திரம் பகுதியில் இயங்கி வரும் ஓர் அறக்கட்டளையில் பொருளாளராக தேவசீலன் உள்ளார்.

கடந்த 2018–ம் ஆண்டு தேவசீலனும், ராஜியும் என்னை சந்தித்து, தனது அறக்கட்டளைக்கு வெளிநாட்டிலிருந்து ரூ.13.98 கோடி வரவுள்ளதாகவும், பொள்ளாச்சி அருகே நடுக்கல்பாளையத்தில் 5 ஏக்கரில் தென்னந்தோப்பு வாங்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அப்போது, ரூ.2.20 கோடி பணத்தை வட்டியில்லாத கடனாக தரும்படி இருவரும் கேட்டனர். நான் கடந்த 2018–ம் ஆண்டு முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் ரூ.2.20 கோடியை அவர்களுக்கு கொடுத்தேன். அதன் பின்னர் பணத்தை தேவசீலன், ராஜி தம்பதி திருப்பித் தராமல் ஏமாற்றிவிட்டனர். போலீஸார் விசாரித்து, எனது பணத்தை மீட்டுத் தர வேண்டும்' என கூறப்பட்டிருந்தது. அதன்பேரில் தம்பதி மீது மோசடி, கூட்டுச்சதி, ஏமாற்றுதல், நம்பிக்கை மோசடி உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் மாவட்ட குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

கோவை வஉசி பூங்கா மைதானத்தில் நடைபெற்ற கூடைப்பந்து போட்டியின் பெண்கள் பிரிவில் மேற்கு ரயில்வே அணியும், கோவை மாவட்ட கூடைப்பந்து கழக அணியும் மோதின. படம்: ஜெ.மனோகரன்

அகில இந்திய கூடைப்பந்து போட்டி இந்தியன் வங்கி அணி அரையிறுதிக்கு தகுதி

● கோவை

கோவை மாவட்ட கூடைப்பந்து கழகம் சார்பில், அகில இந்திய அளவில் ஆண்களுக்கான 57–வது நாச்சிமுத்து கவுண்டர் கோப்பை மற்றும் பெண்களுக்கான 21–வது சிஆர்ஐ பம்ப்ஸ் கோப்பை கூடைப்பந்து போட்டி கோவை வஉசி பூங்காவில் கடந்த 5–ம் தேதி முதல் நடந்து வருகிறது.

3–வது நாளான நேற்று ஆண்கள் பிரிவில் லயோலா அணியும், உத்தரபிரதேச போலீஸ் அணியும் மோதின. இதில் உத்தரபிரதேச போலீஸ் அணி 82–75 புள்ளிக் கணக்கில் வென்றது. தொடர்ந்து நடந்த போட்டியில், சென்னை இந்தியன் வங்கி அணியும், சென்னை லயோலா அணியும் மோதின. இதில் இந்தியன் வங்கி அணி 72–47 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது. பெண்கள் பிரிவில் நேற்று நடந்த முதல் போட்டியில் மும்பை மேற்கு ரயில்வே அணியும், கோவை மாவட்ட கூடைப்பந்து கழக அணியும் மோதின. இதில் மேற்கு ரயில்வே அணி 90–55 புள்ளிக்கணக்கில் வென்றது.

சுழல் சுற்றுகள் முடிவில் ஆண்கள் பிரிவில் இந்தியன் வங்கி, கேரள மாநில மின்சார வாரிய அணிகளும், பெண்கள் பிரிவில் தென்மத்திய ரயில்வே அணி, தென்னக ரயில்வே அணிகளும் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.

ஆழியாறு ஆற்றில் மூழ்கி சிறுவன் உயிரிழப்பு

● ஆனைமலை

கோவை உக்கடம் ஹவுசிங் யூனிட் பகுதியை சேர்ந்த சிறுவர்கள் 5 பேர் நேற்று பொள்ளாச்சிக்கு சுற்றுலா வந்தனர். அம்பராம்பாளையம் வழியாகச் செல்லும் ஆழியாறு ஆற்றில் இறங்கி குளித்தனர். அப்போது, மணிகண்டன் (14) என்ற சிறுவன் ஆற்றில் ஆழமான பகுதிக்கு சென்றதால், நீரில் மூழ்கினார். அவர் நீண்ட நேரமாகியும் வெளியே வராததால், மற்ற சிறுவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

அக்கம்பக்கத்தினர் உதவியுடன், பொள்ளாச்சி தீயணைப்பு நிலையத்துக்கு சிறுவர்கள் தகவல் அளித்தனர். விரைந்த தீயணைப்பு துறையினர் பலமணி நேர தேடுதலுக்குப் பிறகு, மணிகண்டனை சடலமாக மீட்டனர். இதுகுறித்து வழக்கு பதிந்து ஆனைமலை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாயுடன் சேர்க்கும் முயற்சி தோல்வி

குட்டி யானையை முகாமில் பராமரிக்க ஆலோசனை

● கோவை

கோவை வனப்பகுதியில் கடந்த ஒரு வாரமாக குட்டி யானையை தாயுடன் சேர்க்கும் முயற்சி பலனளிக்காத நிலையில், குட்டி யானையை முகாமுக்கு கொண்டு சென்று பராமரிக்க வனத்துறையினர் ஆலோசித்து வருகின்றனர்.

கோவை மருதமலை வனப்பகுதியில் கடந்த மே 30-ம் தேதி உடல் நலம் பாதித்த நிலையில் தரையில் கிடந்த 40 வயது பெண் யானைக்கு, 5 நாட்களாக வனத்துறையினர் சிகிச்சை அளித்தனர். அந்த பெண் யானையுடன் இருந்த 3 மாத ஆண் குட்டி யானை, ஜூன் 1-ம் தேதி மற்றொரு யானைக் கூட்டத்துடன் இணைந்து, வனப்பகுதிக்குள் சென்றது. பின்னர், உடல் நலம் தேறிய தாய் யானை, கடந்த 3-ம் தேதி வனப்பகுதிக்குள் விடுவிக்கப் பட்டது. இரு தினங்களுக்கு முன்பு கூட்டத்தில் இருந்து பிரிந்து வந்த குட்டி யானை, தனியார் தோட்டத்துக்குள் புகுந்தது.

இதையடுத்து குட்டி யானையை மீட்ட வனத்துறையினர், தாய் யானை நடமாடிய குப்பேபாளையம் அட்டுக்கல் வனப்பகுதிக்கு கொண்டு வந்தனர். குட்டி யானையை தாயுடன் சேர்க்க வனத்துறையினர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

குட்டி யானையை தாயுடன் சேர்க்கும் பணியில் ஈடுபட்ட பாகன்கள், வனத்துறையினர்.

நேற்றுமுன்தினம் ஆனைமலை டாப்சிலிப் கோழிகமுதி யானைகள் முகாமில் இருந்து அனுபவம் வாய்ந்த பாகன்கள், காவடி உள்ளிட்ட 4 பேர் வரவழைக்கப்பட்டு, குட்டி யானையை தாயுடன் சேர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதுவும் பலனளிக்கவில்லை.

கடந்த ஒரு வாரமாக தாய் யானையுடன் சேர்க்கும் முயற்சி பலனளிக்காததால், குட்டி யானையை முகாமுக்கு கொண்டு சென்று பராமரிக்க வனத்துறையினர் ஆலோசித்து வருகின்றனர்.

இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, "தாய் யானையுடன், குட்டி யானையை இணைக்க தீவிர முயற்சி கொண்டோம். ஆனால், தாய் யானை, குட்டி யானையை ஏற்கவில்லை. இதுகுறித்து, தலைமை வன உயிரினக் காப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்படும். அவரது உத்தரவின்பேரில் குட்டியை முகாமுக்கு கொண்டு சென்று பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றனர்.

ரூ.20 ஆயிரம் லஞ்சம் வாங்கிய தீயணைப்பு அலுவலர் கைது

● கோவை

கோவை சித்தாபுதூர் அருகேயுள்ள தனலட்சுமி நகர் விரிவாக்கம் பகுதியை சேர்ந்தவர் கருப்புசாமி. இவர், குறிச்சியை அடுத்த சிட்கோவில் தொழில் பயன்பாட்டுக்காக ஒரு கட்டிடம் கட்ட முடிவு செய்தார். இதற்காக, கோவைப் புதூரில் உள்ள தீயணைப்புத் துறை அலுவலகத்துக்கு சென்று, தீயணைப்பு அலுவலர் சிவராஜை அணுகி தடையில்லாத சான்று கேட்டு விண்ணப்பித்தார்.

சான்று வழங்க ரூ.20 ஆயிரம் லஞ்சமாக தர வேண்டுமென சிவராஜ் கேட்டுள்ளார். பணம் கொடுக்க விருப்பம் இல்லாத கருப்புசாமி, கோவை மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸாரிடம் புகார் அளித்தார்.

லஞ்ச ஒழிப்பு போலீஸாரின் அறிவுரைப்படி, ரசாயனம் தடவிய பணத்தாள்களை தீயணைப்பு நிலைய அலுவலர் சிவராஜிடம், கருப்புசாமி கொடுத்தார். அதை சிவராஜ் வாங்கியபோது, லஞ்ச ஒழிப்பு போலீஸார் கைது செய்தனர். சிவராஜின் அலுவலகம், வீடு உள்ளிட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீஸார் சோதனை நடத்தினர்.

வரும் 10–ல் மக்கள் குறைதீர் கூட்டம்

● கோவை

கோவை ஆட்சியர் அலுவலகத்தில் ஜூன் 10-ம் தேதி மக்கள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளதாக, ஆட்சியர் கிராந்திகுமார் பாடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் 'மக்களவைத் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கி கொள்ளப் பட்டதை தொடர்ந்து, கோவை மாவட்டத்தில் ஜூன் 10-ம் தேதி காலை 10 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் வழக்கம்போல் நடைபெறும்' என தெரிவித்துள்ளார்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I Viswadharini Narendra Nath D/O, Sureshkumar G R/o 24/69,1 Floor, Oliver Square, Oliver Road, Mylapore, Chennai 600004 have changed my name to Viswadharini S.

ஆட்கள் தேவை

வீட்டுவேலை

GOVT. REG: ஹோம் நர்ஸ், சமையல், வீட்டு வேலைக்கு பெண்கள் உடனே தரப்படும். பெண்கள் உடனே தேவை. ஸ்ரீ லட்சுமி ஹோம்கேர், கோவை. 99445 60080

கோவையில் 4 நிறுவனங்கள் ரூ.102 கோடி வரி மோசடி

போலி ஜிஎஸ்டி பில் தயாரித்தவர் கைது

● கோவை

கோவையில் இயங்கி வரும் தொழில் நிறுவனங்களில் வரி ஏய்ப்பு, ஜிஎஸ்டி பில் மோசடி செய்யப்படுகிறதா? என்பது குறித்து கோவை மண்டல ஜிஎஸ்டி உளவுத்துறை பொது இயக்குநர் அலுவலக அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

இதில் ரூ.102 கோடியில் போலி பில் தயாரித்து அரசுக்கு ஜிஎஸ்டி செலுத்தாமல் ஏமாற்றி இருப்பது தெரியவந்தது.

அதை, கோவையை சேர்ந்த ஒருவர், 4 நிறுவனங்களுக்கு ஜிஎஸ்டி போலி பில் தயாரித்து கொடுத்ததை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

இதையடுத்து கோவையை சேர்ந்த அந்நபரை, ஜிஎஸ்டி உளவுத்துறை பொது இயக்குநர் அலுவலக அதிகாரிகள் கைது செய்தனர். அந்த நபரிடம் இருந்து பிரிண்டர், 17 நபர்களின் பான் கார்டுகள், 20 பேரின் ஆதார் அட்டை, 21 வங்கிக்கணக்குகளின் பாஸ்புக், 41 வங்கிக் கணக்குகளின் காசோலை புத்தகங்கள், 16 வெவ்வேறு நிறுவனங்களின் முத்திரைகள், பல செல்போன்கள், இ-வே பில்கள், சிம்கார்டுகள், டெபிட் கார்டுகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	மே.பொ/கொ&நி/தூ.அ.மி.நி	3963-M	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/1788/ஒப்பந்தப்புள்ளி/2024

பிரதமர் மோடி ஆட்சி தொடர வேண்டும் என்பது மக்களின் தீர்ப்பு

வானதி சீனிவாசன் கருத்து

● கோவை

பிரதமர் மோடி ஆட்சி தொடர வேண்டும் என்பதுதான் மக்களின் தெளிவான, உறுதியான தீர்ப்பு என பாஜக தேசிய மகளிரணி தலைவரும், எம்.எல்.ஏ.வுமான வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மக்களவைத் தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, பெரும்பான்மைக்கும் அதிகமான இடங்களில் வென்று, தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு தவிர யாரும் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியை தக்க வைத்ததில்லை. நேருவின் சாதனையை சமன் செய்திருக்கிறார் பிரதமர் மோடி

பாஜக மட்டும் தனித்து பெற்றிருப்பது 240 இடங்கள். 'இண்டியா' கூட்டணியில் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து பெற்றிருப்பது 234 இடங்கள். இதில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி பெற்ற 29, ஆம் ஆத்மி கட்சி பெற்ற 3, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பெற்ற 2 என, 35 இடங்கள் காங்கிரஸை எதிர்த்து பெற்ற இடங்கள். 'இண்டியா' கூட்டணிக்கு உண்மையிலேயே மக்கள் அளித்த தீர்ப்பு 199 இடங்கள் மட்டுமே.

ஆனால், ஏதோ பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை தோற்கடித்து விட்டது போலவும், தாங்கள் ஆட்சி அமைத்து விட்டது போலவும் ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

தேர்தலுக்கு முன்பே பாஜக அமைத்த கூட்டணிக்கு, நரேந்திர மோடி தான் பிரதமர் என்று முன்னிறுத்திய கட்சிகளுக்கு, மக்கள் வெற்றியை தந்திருக்கிறார்கள்.

எனவே, மீண்டும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி தொடர வேண்டும் என்பதுதான், இந்திய மக்களின் தெளிவான, உறுதியான தீர்ப்பு. மக்களின் தீர்ப்பை யாரும் மாற்ற முடியாது.

சிறுபான்மையினர் ஒட்டுமொத்தமாக பாஜகவுக்கு எதிராக, ஒரு கட்சிக்கு வாக்களித்துள்ளனர். இதனால் தான், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்த சறுக்கலையும் பின்னடைவையும் பாஜக நிச்சயம் சரி செய்யும். பாஜகவை பொறுத்தவரை இந்த தேர்தல் முடிவுகள் கொண்டாடித் தீர்க்க வேண்டிய வெற்றி.

இவ்வாறு வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல் மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படப்புகைப்படங்களை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

HDFC BANK We understand your world

Regd. Office: HDFC Bank House, Senapati Bapat Marg, Lower Parel (West), Mumbai-400 013.
கிளை அலுவலகம்: 590, 3வது தளம், சாய் டவர், D B ரோடு, R S புரம், கோயம்புத்தூர் - 641002

கோரிக்கை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (SARFAESI சட்டம் 2002) பிரிவு 13(2) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3(1)-ன் கீழ்.

கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்படி (சட்டம்) HDFC பேங்க் லிட்-ன் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறார். மேற்படி சட்டம் பிரிவு 13(12) மற்றும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேற்படி சட்டம் 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பினை (Demand Notice) பின்வரும் கடன்தாரர்களுக்கு (கடன்தாரர்கள்) **08.05.2024** அன்று பதிவு அஞ்சலில் அனுப்பி அந்தக் கோரிக்கை அறிவிப்பில் காணும் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார். அது தொடர்பாக மீண்டும் இப்போது இதன்மூலம் கடன்தாரர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 60 நாட்களுக்குள் கோரிக்கை அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ள தொகை மற்றும் கடன்தாரர்களால் கையொப்பமிட்டு வழங்கப்பட்ட கடன் ஒப்பந்தம் மற்றும் அது சம்பந்தப்பட்ட இதர ஆவணங்கள் மற்றும் எழுத்து வரிகள் படி அந்தக் கோரிக்கை அறிவிப்பு தேதியிலிருந்து, அத்தொகை செலுத்தப்படும் மற்றும் வசூலிக்கப்படும் தேதி வரையான வட்டி செலவுகள் எதிர்பாரா செலவுகள் கட்டணங்கள் முதலானவற்றைச் சேர்த்துச் செலுத்துமாறு கோரப்படுகிறது. கடன் திருப்பிச் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் கடனுக்கு ஈடாக பின்வரும் சொத்துகள் கடன்தாரர்களால் HDFC வங்கி லிட் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

கடன்தாரர்/ஜாமீன்தாரர் பெயர் & முகவரி, கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை மற்றும் NPA தேதி	சொத்து விவரம் - நான்கு எல்லைகளுடன்
கடன்தாரர்: 1.விநாயகர் ஆயில் இண்டஸ்ட்ரீஸ், அதன் சார்பாக உரிமையாளர் Mr.பிரபு, S/o.பாதர் வெள்ளை, முகவரி: 134, தெற்கு தோட்டம், ஒத்தக்கல் மண்டபம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641032. **சக-கடன்தாரர்கள் & அடமானதாரர்கள்: 2.Mr.பிரபு,** S/o.பாதர் வெள்ளை, **3.Mrs.T.மணிமேகலை,** W/o.பிரபு, **இருவரது முகவரி:** 2/374C, திருமுருகன் நகர், பிரீமியர் நகர், ஒத்தக்கல் மண்டபம், கோயம்புத்தூர், தமிழ்நாடு- 641032. **Loan Facility & A/c. No.: Secured Loan Against Property facility A/c No. 86866744**	**கோரிக்கை அறிவிப்பு தேதி:** 08.05.2024 **கடன் நிலுவைத்தொகை 06.05.2024 அன்றுள்ளபடி ரூ.2,64,04,540/-** மற்றும் ஒப்பந்த விதிகளின் படி 06.05.2024 முதல் திருப்பி செலுத்தும் காலம் வரை எதிர்கால வட்டி மற்றும் இதர செலவுகள் **NPA தேதி :** 07.05.2024	**ஐட்டம் எண்.1:** (கிணத்துக்கடவு சார் பதிவாளர் அலுவலகம், விற்பனை பத்திர ஆவண எண்.5209/2016 மற்றும் அதன் திருத்தப்பத்திர ஆவண எண்.936/2018 படி) கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கிணத்துக்கடவு சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட SF எண்.549/2-ல் 1.09.05 ஹெக்டேர் அல்லது 2.70 ஏக்கர், பட்டா எண்.920, **ஒத்தக்கல் மண்டபம் கிராமம், மடுக்கரை தாலுகா** என்னும் முகவரியில் **0.50 ஏக்கர் நிலம், அதனுடன் AC வீட் கூரை குடோன் கட்டிடம் மற்றும் தரைத்தளத்தில் RCC குடியிருப்பு கட்டிடம்,** கதவுகள், ஜன்னல்கள், மின்சார இணைப்பு மற்றும் டெபாசிட் மற்றும் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து அனுமந்த உரிமைகள், அதனுடன் வழக்கமான வழிப்பாதை மற்றும் வண்டிப்பாதை உரிமைகள். எல்லைகள்: 30 அடி அகல கிழக்கு மேற்கு ரோட்டிற்கு வடக்கு, SF எண்.549/2-ல் உள்ள Mr.நடராஜன் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான மீதமுள்ள நிலத்திற்கு தெற்கு, SF எண்.549/2-ல் உள்ள Mr.நடராஜன் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான மீதமுள்ள நிலத்திற்கு கிழக்கு, SF எண்.549/2-ல் உள்ள செட்டில்மெண்ட் பத்திர ஆவண எண்.1753/2009 படி Mr.ஜெயராமன் என்கிற ஜெய்-க்கு சொந்தமான மீதமுள்ள நிலத்திற்கு மேற்கு. **ஐட்டம் எண்.2:** (விற்பனை பத்திர ஆவண எண்.937/2018 படி) திருப்பூர் பதிவு மாவட்டம், தற்போது கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கிணத்துக்கடவு சார் பதிவு மாவட்டம், ஒத்தக்கல் மண்டபம் டவுன் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட SF எண்.549/2-ல் 1.09.05 ஹெக்டேர், பட்டா எண்.920, **ஒத்தக்கல் மண்டபம் கிராமம், முன்னர் கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, தற்போது மடுக்கரை தாலுகா** என்னும் முகவரியில் **0.50 ஏக்கர் அல்லது 0.20.0 ஹெக்டேர் நிலம், அதனுடன் கூலிங் வீட் கூரை குடோன் கட்டிடம்,** அதனுடன் கதவுகள், ஜன்னல்கள், மின்சார இணைப்பு மற்றும் டெபாசிட் மற்றும் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து அனுமந்த உரிமைகள், அதனுடன் வழக்கமான வழிப்பாதை மற்றும் வண்டிப்பாதை உரிமைகள். எல்லைகள்: 30 அடி அகல கிழக்கு மேற்கு ரோட்டிற்கு வடக்கு, நடராஜ் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான சொத்திற்கு தெற்கு, ஏற்கெனவே Mr.P.பிரபு மற்றும் Mrs.மணிமேகலை ஆகியோருக்கு சொந்தமான சொத்திற்கு கிழக்கு, மேலுள்ள SF எண்ணில் உள்ள Mr.நடராஜன் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான மீதமுள்ள நிலத்திற்கு மேற்கு. சொத்துக்களானது Mr.பிரபு, S/o.பாதர் வெள்ளை மற்றும் Mrs.மணிமேகலை, W/o.பிரபு ஆகியோருக்கு சொந்தமானது.

மேற்குறிந்தவாறு HDFC பேங்க் லிட்-க்கு கடன் பாக்கித் தொகையை மேற்படி கடன்தாரர்கள் செலுத்தத் தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் பொருந்துகின்ற விதிகளின் படி மேற்படி கடனுக்கு ஈடான சொத்து மீது கடன்தாரர்களின் முழுமையான சொந்த கஷ்ட நஷ்டத்தின் பேரிலும், விளைவுகள் பேரிலும், மேற்படி கடனுக்கு ஈடான சொத்துகள் மீது HDFC பேங்க் லிட் நடவடிக்கைகள் எடுக்கும். HDFC பேங்க் லிட்-ன் எழுத்துபூர்வமான முன் ஒப்புதல் இல்லாமல் மேற்படி கடனுக்கு ஈடான சொத்தினை விற்பனை, குத்தகை அல்லது இதர வகையில் பரிமாற்றம், உரிமை மாற்றம் செய்வதற்கோ, வில்லங்கம் படுத்துவதற்கோ மேற்படி சட்டம் பிரிவு 13(13) -ன் கீழ் மேற்படி கடன்தாரர்கள் தடை செய்யப்படுகிறார்கள். இதற்கு மாறாகச் செயல்படும் அல்லது செயல்படுவதற்குத் துணை புரியும் எந்தவொரு நபரும் மேற்படி சட்டம் மற்றும் விதிகளின் கீழ் சிறை தண்டனை விதிக்கப்படுவார் மற்றும் அல்லது மேற்படி சட்டத்தின் கீழ் அபராதம் விதிக்கப்படுவார். இதன் பின்னர் வேறு எந்தவொரு அறிவிப்பும் அளிக்கப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

தேதி : 08.05.2024;இடம்: கோயம்புத்தூர் **ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, HDFC பேங்க் லிமிடெட்**

கோயிலில் திருட முயன்ற இளைஞர் கொலை

கோவை அருகே 3 பேர் கைது

● கோவை

கோவை அருகே கோயிலில் திருட முயன்ற இளைஞரை அடித்துக் கொலை செய்ததாக 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை மாவட்டம் சூலூர் அருகே நடுப்பாளையத்தில் அமைந்துள்ள மாகாளியம்மன் கோயிலில் கடந்த 5-ம் தேதி நள்ளிரவு புகுந்த மர்மநபர், உண்டியலை உடைத்து காணிக்கையை திருட முயன்றார்.

அப்போது கோயிலில் பொருத்தப்பட்டிருந்த அலாரம் ஒலித்தது. சத்தம்கேட்டு அக்கம்பக்கத்தினர் கோயில் முன்பு திரண்டனர். கோயிலுக்குள் புகுந்து மர்மநபரை பிடித்து பொதுமக்கள் விசாரித்தனர். அந்நபர், கோவை சுந்தராபுரத்தைச் சேர்ந்த சமீர் (28) என்பதும், உண்டியல் காணிக்கையை திருட முயன்றதும் தெரியவந்தது. இதையடுத்து சமீரை பொதுமக்கள் சரமாரியாக தாக்கினர். இதில் அவர் படுகாயமடைந்தார். இதுகுறித்த தகவலின்பேரில் சூலூர் போலீஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரித்தனர்.

படுகாயமடைந்த சமீரை மீட்டு, கோவை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை சமீர் உயிரிழந்தார். இதையடுத்து, சமீரை தாக்கியதாக நடுப்பாளையத்தைச் சேர்ந்த கனகராஜ் (40), துரை முருகன் (37), பழனிவேல் (51) ஆகிய 3 பேரை போலீஸார் கைது செய்தனர். இவ்வழக்கில் தொடர்புடைய இருவரை தேடி வருகின்றனர்.

சாலை விபத்தில் பெண் வழக்கறிஞர் உயிரிழப்பு

● பொள்ளாச்சி

பொள்ளாச்சி மகாலிங்கபுரம் எல்ஜிஜி காலனியை சேர்ந்தவர் சம்சுதீன். இவரது மனைவி கீதா (40). சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பயிற்சி செய்து வருவதாக கூறப்படுகிறது. நேற்று முன்தினம் மாலை பொள்ளாச்சி மீன்கரை சாலையில், இரட்டைக்கண் பாலம் அருகே இருசக்கர வாகனத்தில் கணவருடன் சென்று கொண்டிருந்தார்.

அவ்வழியாக வந்த அடையாளம் தெரியாத சரக்கு வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே கீதா உயிரிழந்தார். காயமடைந்த சம்சுதீன், பொள்ளாச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து மேற்கு காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

கிளை அலுவலகம் : எண்.117, சாஸ்திரி சாலை, ராம் நகர், கோயம்புத்தூர் - 641009.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட